**11.08.2026 STC No. 306/2018 PW1. வறீதையா**

கடந்த 19.06.2026–ம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மேற்படி சாட்சி இன்று மறு விசாரணை செய்யப்படுகிறார்.

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 11.08.2026.**

**<u>புகார்தாரர் தரப்பு மறு விசாரணை</u>**

1. எனது **Money Lending License நகலை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது) அது Ex.P6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் 16.07.2018–ம் தேதியன்று எனது ஆரோன் Sea Foods Exports நிறுவனத்தின் வங்கிக் கணக்கிலிருந்து 1 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் எடுத்ததற்கான **Indian Bank Account Statement**–யை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். **அது Ex.P7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2. மேலும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் இருவருக்கும் எனது வங்கியில் இருந்து 17.08.2017–ம் தேதியன்று அறிவிப்பு அனுப்பப்பட்டது. அதற்கான **அஞ்சலக இரசீதுகளை (12 எண்ணிக்கைகள்) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அது Ex.P8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் அந்த அறிவிப்புகளை பெற்றுக் கொண்டதற்கான **அஞ்சலக ஒப்புதல் அட்டையை (12 எண்ணிக்கைகள்) நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அது Ex.P9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3. குற்றம் சுமத் 11.01.2019–ம் தேதியன்று தினமலர் நாளிதழில் தங்க நகைகளை ஏலமிடுவதற்கு எனது வங்கியின் சார்பாக அறிவிப்பு கொடுக்கப்பட்டது. அந்த 11.01.2019–ம் தேதியன்று வெளிவந்த **தினமலர் நாளிதழை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அது Ex.P10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

மறுவிசாரணை முடிக்கப்பட்டது.

**<u>குறுக்கு விசாரணை:</u>**

1. 16.07.2018–ம் தேதியன்று நான் வங்கியில் இருந்து 1.5 லட்சம் ரூபாய் எடுத்ததை குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு தான் கொடுத்தேன் என்பதற்கு ஆவணங்கள் இல்லை என்றால், சரிதான். மேற்படி வங்கியில் இருந்து எடுத்த பணத்தை நான் குற்றம்

சுமத்தப்பட்ட நபருக்கு கொடுக்கவில்லை என்றாலும், அதனை சொந்த செலவிற்காக எடுத்தேன் என்றாலும், சரியல்ல.

2. நான் ஏலமிட்ட நகைகளை எந்த தேதியில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் எனது வங்கியில் அடகு வைத்தார்கள் என்றால், அது சரியாக ஞாபகம் இல்லை. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களில நகைகளை யார் அடகு வைத்தார்கள் என்றால், இரண்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் சேர்ந்து தான் அடகு வைத்தார்கள்.

3. Money Lending சட்டத்தின் படி எத்தனை வருடத்திற்குள் பணம் செலுத்தவில்லை என்றால், அறிவிப்பு வழங்க வேண்டும் என்றால், ஒரு வருடத்திற்குள் அனுப்ப வேண்டும். நான் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எத்தனை அறிவிப்புகள் வழங்கினேன் என்றால், 12 அறிவிப்புகள் அனுப்பினேன்.

4. நான் 2–ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எத்தனை அறிவிப்புகள் அனுப்பினேன் என்றால், அது சரியாக ஞாபகம் இல்லை. நான் தாக்கல் செய்த Ex.P9 அஞ்சலக அட்டையில் 12–வது அட்டை அசோனி என்ற பெயரில் உள்ளது என்றால், சரிதான். அந்த 12வது ஒப்புதல் அட்டைக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், நான் தவறுதலாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டேன். அந்த அஞ்சலக அட்டை என்னிடம் உள்ளது.

5. குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அனுப்பிய வழக்கறிவிப்பு அனைத்தும் ஒரே தேதியில் அனுப்பப்பட்டது என்றால், சரிதான். நான் தாக்கல் செய்த Ex.P8 அஞ்சலக இரசீதில் 4 ரசீதுகளில் விஜிலா என்பவர் பெயர் உள்ளது என்றால், சரிதான். விஜிலா என்பவருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால், சரிதான். நான் தவறுதலாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டேன்.

6. நான் முறையாக Money Lending சட்டத்தின் படி கடன் கொடுக்கவில்லை என்றாலும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நகை அடகு வைக்கும் பொழுது பிணையாக கொடுத்த காசோலையை வைத்து பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல.

7. நான் தாக்கல் செய்த Ex.P10 ஆவணத்தின் படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு போதிய அவகாசம் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல. நான் பலமுறை அறிவிப்பு வழங்கியதாக கூறிய நிலையில் எல்லா அறிவிப்புகளும் ஒரே தேதியில்

அனுப்பியதாக தான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால், நான் ஏற்கனவே பலமுறை அறிவிப்புகள் அனுப்பியிருந்தேன். நான் தாக்கல் செய்த Ex.P10 ஆவணத்தில் நகைகளின் விவரங்கள் குறிப்பிடவில்லை என்றால், சரிதான்.

குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate,
Fast Track Court,
Eraniel.